சென்னை, 'குறிஞ்சி' இல்லத்தில் – கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்த நாளில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் ஏற்பாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள "தி.மு.க. நாள்காட்டி –2025"–ஐ வெளியிட்டார். நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் வரலாற்றையும், அவ்வரலாற்றில் சிறப்புமிக்க நாள்களையும் இளைஞர்களிடம் கொண்டு செல்லும் முன்னெடுப்பாகவும் – நீதிக்கட்சி – திராவிடர் கழகம் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் இன்று வரையிலான முக்கியமான தலைவர்கள், மக்களுக்காக அவர்கள் முன்னெடுத்த போராட்டங்கள், தீர்மானங்கள், இயற்றப்பட்ட சமூகநீதிச் சட்டங்கள் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளை நினைவு கூரும் விதமாகவும் "தி.மு.க. நாள்காட்டி 2025" தயாரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்நாள் காட்டியை நெறிமுறைப்படுத்திய எழுத்தாளரும் – 'தி.மு.க. ரைடர்ஸ்' ஒருங்கிணைப்பாளருமான அ.ராஜா தமிழ் மாறன், கழக மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ் காந்தி ஆகியோர் இந்நாள் காட்டி வெளியீட்டின் போது உடனிருந்தார்கள்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.11.2024) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி சடையன்குப்பம் இருளர் காலனியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் பொதுமக்களுக்கு அரிசி, பால், ரொட்டி, பாய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், இ.பரந்தாமன், கே.பி.சங்கர், துணை மேயர் மு.மகேஷ் குமார், புழல் நாராயணன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.